சுற்றும் முற்றும் பார்க்கிறேன், அதிலே என்ன இருக்கிறதோ என்று வியந்தவாறு, நான் எனக்கு ஒரு ஏணியை எடுத்து, அதை சுவரில் சாய்த்து வைத்து (push around), நான் அதை அடைவது மட்டுமாக, தொடர்ந்து ஏறிக்கொண்டேயிருப்பேன். அந்தவிதமாகத்தான் வேதாகமத்திலுள்ள ஒரு வாக்குத்தத்தமும் இருக்கிறது, ஏதாவது ஒருவிதத்தில் எனக்கு விளங்காமல், மறை பொருளாயிருப்பது போன்று தோன்றினால், நான் அதை அடைவது மட்டுமாக தொடர்ந்து ஜெபித்துக் கொண்டேயிருப்பேன். அவ்வளவு தான். அதைச் செய்ய வேண்டிய வழி அதுதான். நீங்கள்… மட்டுமாக, தொடர்ந்து ஜெபித்து, தொடர்ந்து விடாப்பிடியாய் இருந்து, உயர ஏறிக்கொண்டே, விசுவாசித்துக்கொண்டேயிருங்கள். நீங்கள் அதற்கு சுதந்தரவாளியாயிருக்கிறீர்கள், நீங்கள் அதற்கான ஒரு வாக்குத்தத்தத்தைப் பெற்றிருக்கிறீர்கள், உங்களுக்கு அதற்கான ஒரு உரிமை உண்டு, "கேளுங்கள், அப்பொழுது பெற்றுக்கொள்வீர்கள், விசுவாசிக்கிறவர்களுக்கு எல்லா காரியங்களும் கூடும்."

***செய்தி:*** யேகோவா-யீரே #1, ஏப்ரல் 2, 1964, பத்தி எண் 77

★★★★★


**இலவச பிரதிகளுக்கு:**

சகோ. பினேகாஸ்

போன்: 8838623242, 9551855108


www.thefinish.in


# ஜெபம்

## மிகவும் வல்லமையான ஆயுதம்!

## **Prayer** – The Most Powerful Weapon!

**பாகம் 1**



(தமிழாக்கம்: சகோ. S. A. ஜெபகுமார்)

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# இரகசிய ஜெப அறை

## SECRET PRAYER CLOSET

~~~~~~~

***மத்தேயு 6:6***

**நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்.**

★★★★★

**இதைக் குறித்து சகோ. பிரன்ஹாம் கூறுவதை இங்கு வாசிக்கலாம்:**

கர்த்தரோடு தனித்திருக்க உங்களுக்கு விருப்பமில்லையா? என்னே, என்னே, அப்படியே தனிமையாய் இருங்கள். அங்கே சிலசமயங்களில்... "சிலசமயங்களில் நான் கிறிஸ்துவோடு கூட முழுவதும் தனித்திருக்க விரும்புகிறேன், என் ஆண்டவரே" என்னும் ஒரு சிறு பாடலை நாங்கள் பாடுவது வழக்கம். நீங்கள் எப்பொழுதாவது அதைக் கேட்டிருக்கிறீர்களா? முழுவதும் தனியாக இருந்தே, நான் என்னுடைய கஷ்டங்கள் எல்லாவற்றையும் அவரிடம் கூற



★★★★★

அதன்மேல் தான் இந்தச் சபையானது நிறுவப்பட்டிருக்கிறது, ஒருவருக்காக ஒருவர் கொண்டிருக்கிற அந்த தெய்வபக்தியுள்ள, சகோதரத்துவ அன்பு. இவ்விடத்தை விட்டுப்போகும் போது, ஒருவர் மற்றவரின் கரங்களைக் குலுக்கி, ஒருவரை ஒருவர் விட்டுச்செல்லுவதற்காக, குழந்தைகளைப் போன்று அழுகிறவர்களையும் கூட நான் கண்டிருக்கிறேன். அவர்கள் அவ்வளவு அதிகமாக ஒருவரையொருவர் நேசித்தார்கள். நான் அவர்கள் வீட்டிற்கு அவர்களிடம் விஜயம் பண்ண போக முடிந்தால், வேதாகமம் திறந்தபடி இருக்க, அது கண்ணீரால் தோய்ந்து காணப்படும் நேரங்களைக் கண்டிருக்கிறேன். இரவு நேரத்தில் உள்ளே வரும் போது, அங்கே தகப்பன்மார்களும் தாய்மார்களும் ஒன்றாக கூடி, அவர்களுடைய சிறு பிள்ளைகள் தரையின் மேல் சுற்றிலும் முழங்கால்படியிட்டிருப்பார்கள்; தகப்பன்மார்களும் தாய்மார்களும் தங்கள் முழங்கால்களில் நின்று, அழுது கொண்டும், ஜெபித்துக் கொண்டும் இருப்பார்கள். நான் கதவண்டை காத்து காத்து, காத்துக்கொண்டே நிற்பேன். அவர்கள் ஜெபத்தை நிறுத்தவே மாட்டார்கள். அப்போது நானே படிகள் மேல் உட்கார்ந்து ஜெபிக்கத் தொடங்கி விடுவேன், அவர்களுக்காக காத்துக் கொண்டிருப்பேன், பாருங்கள். அது-அது இருந்தது... அவர்கள் ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள். அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் அன்புள்ளவர்களாக இருக்கிறார்கள்.

***செய்தி:*** **உன்னைத் தாழ்த்து, ஜூலை 14, 1963, மாலை, பத்தி எண் 97**

★★★★★

உங்களுக்குத் தெரியும், கொஞ்சம் மிக அதிக உயரத்தில் இருக்கிற எதையாவது நான் கண்டுபிடிப்பேனா என்று
~~~~~~~

***செய்தி:*** **உன் வீட்டார், ஆகஸ்டு 8, 1961, பத்தி எண் 23**

★★★★★

நான் இரண்டு-இரண்டு பிரதான தவறுகளைச் செய்து விட்டதாக யாரோ ஒருவர் என்னிடம் கூறினார்: அவைகளில் ஒன்று யாதெனில், இயேசுவைக் குறித்து பெரிதாக அதிகம் பேசுவது என்றும், மற்ற தவறு என்னவென்றால், அதிக தடவைகள் நான் ஜெபத்தில் இருப்பது என்றும் கூறினார். என்னால் அதை அளவுக்குமீறிச் செய்ய முடியவில்லையே. "புருஷர்கள் எல்லா இடங்களிலும் ஜெபம் பண்ண வேண்டு மென்று விரும்புகிறேன்." அவரைக் குறித்துப் பேசுவது எனக்குப் பிடிக்கும்.

***செய்தி:*** **இதோ, அவர்கள் எல்லாரிலும் பெரியவர் இங்கே இருக்கிறார், ஜூலை, 15, 1962, பத்தி எண் 34**

★★★★★

இப்பொழுது, உங்கள் புருஷனையோ அல்லது உங்கள் மனைவியையோ தேவன் இரட்சிக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், அப்படியே தொடர்ந்து அவர்களுக்காக ஜெபித்துக் கொண்டேயிருங்கள், அப்படியே தொடர்ந்து ஜெபம் பண்ணுங்கள். நீங்கள் செய்ய வேண்டியது எல்லாமே அவ்வளவு தான். அப்படியே தொடர்ந்து ஜெபித்துக்கொண் டும், விசுவாசித்துக்கொண்டும் இருங்கள். அங்கே எந்தவிதத்தி லாவது ஜீவனின் ஏதாவது தீப்பொறி இருக்குமானால், அவர்கள் அதைக் காணும்படியாக அந்தப் பாதையின் குறுக்காக தேவன் ஏதாவதொன்றை வைப்பார். அப்போது அவர்கள் அதைப் புறக்கணிப்பார்களானால், அது அவர் களைப் பொறுத்தது.

***செய்தி:*** **கடலின் மேல் ஒரு சாட்சி, ஜூலை 20, 1962, பத்தி எண் 54**



முடியும். அந்தவிதமாகத்தான் அவர் உங்களிடம் வர விரும்பு கிறார், நீங்கள் அவரிடத்தில் தனியாக வர விரும்புகிறார். உங்கள் ஜெபங்கள், நீங்கள் தனிமையாக இருக்கும் போது, உள்ளதைப் போன்று, ஏறக்குறைய அதே அளவு தாக்கத்தை உடையதாக இல்லை, ஓ, ஒருக்கால் வரலாம், உங்களுக்குத் தெரியும், உதாரணமாக, நல்லது, நீங்கள் வெளியே சபை யிலோ, அல்லது பீடத்தைச் சுற்றிலும் இருப்பது போன்று பகிரங்கமாக ஜெபிக்கும்போது, அது (தனியாக இருந்து ஜெபிப்பது போன்று) அதே அளவு தாக்கத்தை உடையதாக இல்லை. தனியாக வாருங்கள். அப்போது நீங்கள் பொது ஜனங்களிடத்தில் இருக்கும்போது, நீங்கள் ஜெபிக்கிறதைக் காட்டிலும், நீங்கள் தனித்திருக்கும்போது, ஒரு வித்தியாசமான ஜெபத்தை ஏறெடுப்பீர்கள். நீங்கள் எல்லாரும் நழுவி தனிமையாக வந்து விடுங்கள்; வெளியே போய், மிக இரகசியமாக சந்திக்கும் ஒரு ஸ்லத்தைக் கொண்டிருங்கள், அங்கே நீங்களும் கர்த்தரும் ஒரு நாளில் அநேக தடவைகள் சந்தித்து ஜெபியுங்கள்.

***செய்தி:*** **பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசம், மே 1, 1955 மாலை, பத்தி எண் 8**

★★★★★

நீங்கள் முதலாவது சமையலறைக்கு வருகிறீர்கள். சமையலறை, அங்கே தான் நீங்கள் புசிக்கிறீர்கள். நீங்கள் வந்து, புசித்த பிறகு, சபையைப் போன்று, நீங்கள் பெஞ்சின் மேல் அமர்ந்து, வார்த்தையை கேட்கிறீர்கள். "விசுவாசம் கேள்வியினாலே வரும், வார்த்தையைக் கேட்பதினால் வரும்." அதன்பிறகு நீங்கள் வார்த்தையைப் புசித்த பிறகு, நீங்கள் அமர்ந்து அளவளாவும் அறைக்குள் (living room) வருகி றீர்கள், அது சபையிலுள்ள மற்றவர்களோடு கொண்டிருக்கும் ஐக்கியத்திற்குள் இருக்கிறது. அதன்பிறகு, அந்தரங்கமான

இடம் படுக்கையறை தான், அதனுள்ளே நீங்கள் பிரவேசித்து, முழங்கால்படியிடுகிறீர்கள், அங்கே தான் வழக்கமாக, நீண்ட காலத்திற்கு முன்பு, தாய்மார்களாகிய உங்களில் நிறைய பேர், உட்பிரவேசித்து, உங்கள் பிள்ளைகள் இரவில் வெளியிலிருந்த போது, அவர்களுக்காக ஜெபம் பண்ணுவீர்கள். இன்றைக்கு உலகத்தோடுள்ள காரியம் அதுதான், அதோ அங்கே முற்காலத்தில், நீண்ட காலத்திற்கு முன்பு, தங்கள் பிள்ளைகளுக்காகவும் மற்றும் காரியங்களுக்காகவும் ஜெபித்த அந்தப் பழைமை நாகரீகமான தாய்மார்களுக்குப் பதிலாக, இன்றிரவோ அவர்கள் தங்கள் பிள்ளைகளோடு வெளியேயிருந்து, புகைப்பிடித்துக்கொண்டும், மது அருந்திக் கொண்டும், அவர்கள் இருப்பது போன்று தொடர்ந்து செய்து கொண்டும் இருக்கிறார்கள். ஆகையால் தான் இளம்பருவத்தினரின் குற்றச் செயல்களை நாம் பெற்றிருக்கிறோம். அவர்களுக்கு இருந்த நாகரிகத்தைக் காட்டிலும், நாம் அதிக நாகரிகம் கொண்டவர்களாக பேசிக்கொள்கிறோம். எனக்கு அது சந்தேகமாயிருக்கிறது. உ-ஊ. அப்படியானால் நிச்சயமாக அதைப் போன்று நடந்திருக்க மாட்டோமே. ஒரு காரியம் உண்மை. அந்தப் பழைமை நாகரீகமான பாணி எனக்குப் பிடிக்கும்.

***செய்தி:*** **தீட்டுக்களிக்கும் தண்ணீர், ஜூன் 6, 1955, பத்தி எண் 33**

★★★★★

எப்படியாக ஒரு ஊழியக்காரன், அவன் பிரசங்கம் பண்ணுவதற்கும் கூட முன்பாக, அவன் ஜெபிப்பதற்கு முன்பாக, எப்போதுமே அவன் தன்னைத்தானே தனிமைப் படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. அவன் எதையும் செய்வதற்கு முன்பாக, அவன் அந்த அமைதியான இடத்தில் தேவனோடு கூட தனித்திருக்க வேண்டும், தேவனோடு



எனது விருப்பம். அவர்கள் இரட்சிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியால் நிறையப்படுவதைக் காண விரும்புகிறேன்.

இப்பொழுது, நான் அவர்களை தேவனிடம் ஒப்புவித்து, "நான் அவர்களுக்காக தேவனையே பற்றிப்பிடித்திருக்கிறேன்" என்று கூறி விட்டேன். பாருங்கள்? அவர்கள் ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படப் போகிறார்கள் என்று விசுவாசிக்கிறேன். பாருங்கள்? அவர்கள் இரட்சிக்கப்படப் போகிறார்கள் என்றும், நான் அவர்களை மறுகரையில் கொண்டிருப்பேன் என்றும் விசுவாசிக்கிறேன். என்னுடைய இரட்சிப்பு அவர்களையும் இரட்சித்து விடும் என்று நான் நம்புவதில்லை. இல்லை. ஆனால் தேவனிடத்திலுள்ள என்னுடைய விசுவாசம் அதைச் செய்யும். நீங்கள் பாருங்கள், தேவன் அதைச் செய்வார் என்று என்னுடைய விசுவாசம் விசுவாசித்துக் கொண்டேயிருக்கிறது, அது அவர்கள் கிறிஸ்துவிடம் வரக் காரணமாகி விடும்.

அங்கே தான் ஜனங்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிறீர்கள் என்று நம்புகிறேன், ஆகையால் தான் உங்கள் பிள்ளைகள் இந்த விதத்தில் இருக்கிறார்கள், அவர்கள் நாம் ஜீவித்துக் கொண்டிருக்கும் இந்தக் கொடிய உலகத்தில் உண்மையான சீமாட்டியாகவும் (lady), கண்ணியமான நடத்தையுள்ள பண்பாளர்களாகவும் (gentleman) இருக்கிறார்கள். இருப்பினும் எந்தப் பிள்ளைகளைக் குறித்தும் நான் அறிந்திருக்கிற மிகச் சிறப்பான அந்த-அந்த பாகத்தை அவர்கள் தங்களைக் குறித்து உடையவர்களாயிருக்கிறார்கள். புரிகிறதா? நல்லது, அதற்குக் காரணம் என்னவென்றால், அவர்களுக்காக நீங்கள் ஜெபித்த உங்கள் ஜெபங்கள் தான் என்று நினைக்கிறேன். நீங்கள் அவர்களை தேவனிடம் ஒப்புவித்து, தொடர்ந்து விடாப்பிடியாய் பற்றிப்பிடித்துக் கொண்டு இருந்தீர்கள்.

என்னவென்று கூறும்படியாக, அந்தச் சிறு பாகம் அங்கே உள்ளே எத்தனை தடவைகள் முன்னும் பின்னுமாக சுற்று கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. அந்தக் கைப்பாகம் தான் (நேரத்தைக்) கூறுகிறது. ஆனால் அந்தச் சிறு சக்கரங்கள் அவ்விதமாக முன்னும் பின்னுமாக நகராமல் (jumping) இருந்திருக்குமானால், இங்கேயிருக்கும் எந்த கைப்பாகமும் எந்த நேரத்தையும் உண்டுபண்ணியிருக்காது. புரிகிறதா? அது எங்கேயிருந்தது என்று எனக்குத் தெரியாது. அங்கே மேலேயிருக்கும் அந்தச் சிறிய காரியத்தைச் சுற்றிவரும்படி செய்ய, அங்கே ஒரு சுருள்வில் இல்லாமலிருந்தால், ஏன், அது முன்னும் பின்னும் நகர்ந்திருக்கவே செய்யாது. பாருங்கள்?

14. எனவே நாம்-நாம்... எல்லாமே ஒருமித்து கிரியை செய்தாக வேண்டும். சபை எல்லாமே ஜெபிக்க வேண்டி யிருக்கிறது, சபையிலுள்ள சாதாரண ஜனங்கள் (laity) எல்லா ரும் ஜெபித்தாக வேண்டும், டீக்கன்மார்களும் தர்மகர்த்தாக் களும் மற்றும் மேய்ப்பரும் ஜெபிக்க வேண்டும், அவ்விதம் நாம் ஒரே கூட்டமாக, ஒரே மகத்தான பிரிவாக தேவனுடைய பிரசன்னத்திற்குள் வருகிறோம்.

***செய்தி:* தாவீதின் குமாரனே, என்மேல் மனமிரங்கும், பிப்ரவரி 15, 1961, பத்தி எண் 10-14**

★★★★★

23. இப்பொழுது, என்னுடைய பிள்ளைகள் எனக் குண்டு. அங்கே என்னுடைய சிறிய மகன் ஜோசப்பும், பில்லியும், சாராவும், ரெபேக்காளும் இருக்கிறார்கள். நல்லது இப்பொழுது, அவர்கள் ஒவ்வொருவரும் சுவிசேஷத்தில் வேலையாட்களாக, ஏதோவொன்றைச் செய்வதை காணுவதே



மறைத்துக்கொள்ள வேண்டும். எப்படியாக அந்த, அந்தத் திரை ஒருமுறை கீழே விழ...

***செய்தி:* ஒரு மறைக்கப்பட்ட ஜீவியம், அக்டோபர் 6, 1955 பிற்பகல், பத்தி எண் 29**

★★★★★

44. இப்பொழுது, கவனியுங்கள், முதலாவது காரியம் என்னவென்றால் புத்துணர்ச்சியாக இருந்தது தான். அந்த விதையை எது வளரச் செய்கிறது? நீங்கள் எப்பொழுதாவது காலையில் எழுந்து, வானத்திலிருந்து கீழே விழுந்து, பூமியைப் புதுப்பிக்கும் பனித்துளியைப் பார்த்ததுண்டா? அது எப்படி அதைப் புதுப்பிக்கிறது? அது அமைதியாக இருக்கும்போது தான். பனித்துளிகள் பகல் நேரத்தில் விழுவதில்லை. எல்லாமே அமைதியாக இருக்கும் போது, பனித்துளிகள் இரவு நேரத்தில் தான் விழுகிறது. என்னுடைய சகோதரனே, நீங்கள் பயங்கரமாக சண்டையிட்டுக்கொண்டும், வாக்குவாதம் செய்துகொண்டும், இங்கே இந்த பூமியின் மேலுள்ள காரியங்களைக் குறித்து பதட்டமடைந்து கொண்டும் இருக்கும் காலம் வரையில், பனித்துளிகள் ஒருபோதும் உங்கள் மேல் விழ முடியாது. தேவனோடு தனிமையாக வாருங்கள், இரக்கத்தின் பனித்துளிகள் அமைதியாக இருக்கும் உங்கள்மேல் விழட்டும். விலையேறப்பெற்ற நினைவுகள், எப்படியாக அவைகள் தங்குகின்றன, அவைகள் எப்பொழுதும் எப்படியாக எனது ஆத்துமாவை நிரப்பு கின்றன; நள்ளிரவின் அமைதியில், இரகசியங்கள் திறக்கப் படுகின்றன. தேவன் எப்படியாக தம்முடைய விசுவாசியை தானாகவே தனிமையாக இருக்கும் அவனைச் சுற்றிலும் விழுகிற திரைச்சீலையோடு பெற்றுக்கொள்ள முடிகிறது, அவர் வானத்திலிருந்து வரும் புத்துணர்ச்சியைக் கீழே கொண்டு வருவார், அங்கே வேறெந்த நபரும் கிடையாது,

அல்லது உலகத்தில் அதை எப்பொழுதாவது அறிந்து கொள்வதற்கு வேறு வழியே கிடையாது, அங்கேயிருப்பது அவன் மாத்திரமே.

***செய்தி:*** **ஒரு மறைக்கப்பட்ட ஜீவியம், அக்டோபர் 6, 1955 பிற்பகல், பத்தி எண் 44**

★★★★★

ஆனால் அதன்பிறகு, உங்கள் படுக்கையறை தான் நீங்கள் ஓய்வெடுக்கும் இடமாகும். ஒரு களைப்புற்ற நாளின் வேலைக்குப் பிறகு, எப்போதுமே அந்த அறைக்குள் தனிமையாக இருந்து, ஓய்வு எடுத்துக் கொண்டிருப்பீர்கள். எந்த வீட்டிலும், ஜெப அறை என்பது படுக்கை அறை யாகத்தான் இருக்கிறது.

அநேக சமயங்களில், நான் சிறிய பழைய வீடுகளுக் குள் போகும் போது, அந்தத் தாய்மார்களும் மற்றவர்களும் ஒரு சிறு பழைய பலவர்ண கட்டம் போட்ட மேல் ஆடையை (checkered apron) அணிந்தவர்களாக, தங்கள் கண்களைத் துடைத்துக்கொண்டும், அழுது கொண்டும் படுக்கையறையை விட்டு வெளியே வருவதைக் கண்டிருக்கிறேன்; தேவனோடு தனியாக இருந்து, அவரைச் சந்திக்கும் அந்தரங்க இடத்தில் அவர்கள் ஜெபித்துக் கொண்டு இருப்பார்கள், தனிமைப்படுத்திக்கொள்ளுதல். ஓ, அது ஒரு அற்புதமான இடமாக இருக்க வேண்டும்.

***செய்தி:*** **கிறிஸ்துவோடு மறைக்கப்பட்ட ஒரு ஜீவியம், நவம்பர் 10, 1955, பத்தி எண் 24**

★★★★★

நீ ஒரு கிறிஸ்தவனாக ஆகும்போது, நீ தேவனுடைய பிரசன்னத்தில் வர எவ்வளவாக ஏங்குவாய். நீங்கள் தேவ



***செய்தி:*** **யேகோவா-யீரே, பிப்ரவரி 9, 1961, பத்தி எண் 34**

★★★★★

சிலநேரங்களில், யாராவது, "ஏன்... சகோதரன் பிரன்ஹாமே, உம்முடைய ஆராதனை வெற்றியாக அமைய என்ன காரணம்?" என்று கேட்கலாம்.

நிச்சயமாக, அது கிறிஸ்து தான்.

"எப்படித்தான் நீங்கள் அவ்விதம் சகித்துக் கொள்கி றீர்கள், அப்படியே தொடர்ந்து இரவுக்குப் பின் இரவாக போய்க் கொண்டேயிருக்கிறீர்களே?"

11. என்னுடைய பையன்கள், அது என்னோடு இருக்கும் ஜனங்கள்; இங்கே போகிற இந்தப் பையன் சிலசமயங்களில் நாட்களாக, சாப்பிடவும் கூட செய்யாமல், முகங்குப்புற விழுந்து, எனக்காக உதவி செய்யும்படி தேவ னிடம் கதறுகிறான். இப்பொழுது, தேவனால் அதைப் புறக்கணிக்க முடியாது. பாருங்கள்? வீட்டில் எனது மனைவி யும் என்னுடைய பிள்ளைகளும், என் அன்பார்ந்தவர்களும், ஜனங்களும், எனது நண்பர்களும் உபவாசம் பண்ணி, ஜெபிக்கிறார்கள். அங்கே தான் வெற்றி இருக்கிறது.

12. பாருங்கள், நாங்கள் ஒவ்வொருவரும்... நாங்கள் எல்லாருமே பிரசங்கிக்க முடியாது, நாம் எல்லாருமே... நம்மில் சிலரால் ஒரு காரியத்தையும் மற்றவருக்குச் செய்ய முடியாது. ஆனால் நாமெல்லாரும் ஏதோவொன்றைச் செய்து, அது யாரோ ஒருவருக்கு உதவியாயிருக்க முடியும். உங்க ளுக்குப் புரிகிறதா?

13. அப்படியே இங்கேயிருக்கும் இந்தக் கைக்கடி காரத்தைப் போன்று. அது நேரத்தைக் கூறும்படி, அதன்மேல் ஒரு-ஒரு கைப்பாகம் இருக்கிறது. இப்பொழுது, நேரம்

எந்த கணத்திலும், தேவன் உங்களுக்குத் தரிசனமாக வேண்டுமென்று எப்போதும் எதிர்பார்த்துக் கொண்டிருங்கள்.

***செய்தி:*** **மரியாளின் விசுவாசம், மார்ச் 11, 1960, பத்தி எண் 16**

★★★★★

மேலும் இப்பொழுது, எல்லாவற்றிற்கும் மேலாக, ஒருவர் மற்றவருக்காக தொடர்ந்து ஜெபித்தவண்ணம் இருங்கள், எந்தவிடத்திலும் பிசாசு ஒருபோதும் எந்தக் கசப்பையும் காண்பிக்க அனுமதிக்காதீர்கள். பாருங்கள்? இந்த மணிவேளையில், உங்கள் ஆத்துமாக்களை தூய்மையாக வைத்துக்கொள்ளுங்கள், இவ்வுலகத்தின் சரித்திரம் முடிந்து கொண்டிருக்கும் வேளையில் நாமிருக்கிறோம்.

***செய்தி:*** **பெர்கமு சபையின் காலம், டிசம்பர் 7, 1960, பத்தி எண் 28**

★★★★★

நீங்கள் உங்களுக்காக விசுவாசிக்க உங்களால் முடியுமானால், உங்கள் வீட்டாருக்காகவும் கூட உங்களால் விசுவாசிக்க முடியும். உங்களுக்காக விசுவாசிக்க தேவனிடத்தில் போதுமான விசுவாசத்தை உடையவர்களாக இருங்கள், அதன் பிறகு உங்கள் பிள்ளைகளுக்காகவும் கூட விசுவாசியுங்கள். உங்களை இரட்சித்த அந்த அதே விசுவாசம், உங்கள் பிள்ளைகளையும் இரட்சிக்கும். நீங்கள் அப்படியே தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருப்பீர்களானால். அப்போது தேவன் ஜெபத்திற்குப் பதிலளிப்பார், கவலைப்பட வேண்டாம். வெறுமனே அவரிடம் விண்ணப்பம் பண்ணி, அதை விசுவாசித்து, அதை உங்கள் இருதயத்தில் நங்கூரமிடச் செய்து, அப்படியே தொடர்ந்து போய்க் கொண்டிருங்கள். அந்தவிதமாகத்தான் அது செய்யப்பட்டிருக்கிறது. ஆம், ஐயா.



னோடு சற்றுநேரம் தனிமையாக வர முடிந்து, அப்படியே கரையுடன் இணைக்கும் ஒவ்வொரு கயிற்றையும் (shoreline) கட்டவிழ்த்து விட்டு (விலகி), இரகசிய அறைக்குள் வந்து, கதவைப் பூட்டி, உங்கள் கைகளை உயர்த்தி, அப்படியே மனதில் இருப்பவற்றை பகிர்ந்து கொள்ளும் அந்த ஐக்கியத்திற்குள் (communion) வரும்போது, அது உங்கள் ஜீவியத்தில் எப்படிப்பட்ட மிகப்பெரிய சந்தோஷமாக இருக்கிற ஒரு அனுபவத்தை தேவனோடு கொண்டிருப்பதைத் தவிர வேறொன்றை எப்பொழுதாவது கொண்டிருக்கும் ஒரு நபரும் இங்கிருக்க மாட்டார்கள். ஓ, அங்கே அதைக் குறித்து ஏதோவொன்றுள்ளது, அது அற்புதமாயிருக்கிறது.

நான் அங்கே உள்ளே அதைப் பெற்றிருக்கிறேன், உங்களுக்கும் கூட அந்த அனுபவம் உண்டு, அப்படியே முழங்கால்படியிட்டு, உங்களால் இனியும் அதைத் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு, அழுதுகொண்டும், கண்ணீர் வடித்துக்கொண்டும் இருந்து, "தேவனே, என்னால்-என்னால் முடியவில்லை - இனியும் என்னால் இதைத் தாங்கிக்கொள்ள முடியாது" என்று கூறிக் கொண்டிருத்தல்.

***செய்தி:*** **ஐக்கியம், பிப்ரவரி 12, 1956, பத்தி எண் 21**

★★★★★

24. எனவே, ஐக்கியம் கொள்ளும் அந்த நேரத்திலும், மனதில் இருப்பவற்றைப் பகிர்ந்து கொள்ளும் அந்த நேரத்திலும் (communion), அங்கே தான் தேவன் என்னிடம் பேசுகிறார். அந்தவிதமாகத்தான் அதைக் குறித்து ஆவிக்குள்ளாக நாம் விரும்புகிறோம். முழுவதுமாக ஜெபித்து, ஆவிக்குள்ளாகும்படி நீங்கள் விரும்புகிறீர்களா? உங்களால் அதைச் செய்ய முடிந்த ஒரே வழி அதுதான். மற்ற உலகத்தார் உங்களைத் தொடர்புகொள்ள முடியாதபடி, உங்களை

நீங்களே அடைத்துக்கொண்டு (Shut off), தேவனோடு தன்னந்தனியாக வந்து விடுங்கள். நீங்கள் ஏன் அதைச் செய்ய விரும்புகிறீர்கள் என்றால், பூமியின் மேல் அந்த முதலாவது ஜோடிகளாகிய, ஆதாமும் ஏவாளும் வந்தபோது, அவர்கள் அதைத்தான் செய்தார்கள்.

***செய்தி:*** **ஐக்கியம், பிப்ரவரி 12, 1956, பத்தி எண் 24**

★★★★★

128. நீங்கள் ஜெபிக்கிறீர்களா? எத்தனை சிறு பையன் களும் சிறுமிகளும் ஜெபிக்கிறீர்கள்? உங்கள் கரங்களைப் பார்ப்போம். ஓ, அது அருமையானது. இப்பொழுது, அது நல்லது. அம்மாவும் அப்பாவும் கூட உங்களைக் காணாத இடத்தில், நீங்கள் போய் ஜெபிக்கும் ஒரு இரகசிய இடம் உங்களுக்கு உண்டா? நீங்கள் அவ்விதமாக ஜெபிக்கிறீர்களா? நீங்கள், நீங்கள் அவ்விதம் ஜெபிப்பது இல்லையா? ஒரு சிறிய இடத்தைக் கொண்டிருந்து, இரகசியமாக நழுவிச் சென்று (slip out), ஜெபியுங்கள், உங்கள் சிறு ஜெபத்தைச் செய்யுங்கள். நீங்கள் படுக்கைக்குப் போகும் முன்பு, ஒவ்வொரு இரவும் அதை ஜெபிக்கிறீர்களா? நீங்கள் காலையில் எழும்போதும், மற்றும் காரியங்களிலும் அதை ஜெபிக்கிறீர்களா? ஓ, அது நல்லது. மற்ற எத்தனை சிறு பையன்களும் சிறுமிகளும் ஜெபிக்கிறீர்கள் (உங்கள் கரத்தை மேலே உயர்த்துங்கள்)? கட்டிடம் (முழுவதும்) நிறைய பேர். ஓ, அது அருமையாக இல்லையா? நல்லது, இப்பொழுது, அது நல்லது. அது நீங்கள் இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று உங்களுக்கு போதிக்கிற ஒரு உண்மையான தாயையும் தகப்பனையும் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள் என்பதைத்தான் காட்டுகிறது. இப்பொழுது, நீங்கள் உண்மையாகவே தேவையில் இருக்கும் போது தான், நீங்கள் அதிக உத்தமமாக ஜெபிப்பீர்கள். அது அவ்வாறு இல்லையா?



அப்பொழுது ஜனங்கள் உங்களை நேசித்து, உங்களுக்காக ஜெபம் பண்ணுவார்கள்.

அதுதான் என்னுடைய கூட்டங்களின் வெற்றியாக அமைந்துள்ளது, உண்மையான தெய்வ பக்தியுள்ள ஜனங்கள் எனக்காக ஜெபிப்பது தான் அதற்குக் காரணம். அதுதான் அது. ஆகையால் தான் என்னுடைய கூட்டங்கள் வெற்றி கரமாக அமைகின்றன.

***செய்தி:*** **ஜீவனுக்காக தாகமாயிருத்தல், மார்ச் 4, 1960, பத்தி எண் 52**

★★★★★

ஓ, நாம் நமது சிந்தையில் மற்ற அநேக காரியங்களை வைத்திருக்காமல் இருந்தால். சிலசமயங்களில், நாம் சபைக்கு வந்து, "நாளைக்கு நான் இதைச் செய்ய வேண்டும், அடுத்த நாள், நான் இதைச் செய்ய வேண்டும்" என்று, அதைக் குறித்து, சிந்தித்துக் கொள்வோம் என்பது உங்களுக்குத் தெரியும். நாம் சபைக்கு வரும்போது, உலகத்தைப் பற்றிய ஒவ்வொரு நினைவையும், ஒவ்வொரு காரியத்தையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு, கிறிஸ்துவோடு ஐக்கியத் திற்குள் பிரவேசித்து, ஆராதிக்க வேண்டும்: நம்முடைய இருதயங்களில் தியானித்து, ஆராதித்துக் கொண்டு, பாடல் களையும் துதிகளையும் அவருக்குச் செலுத்தி, அவருடைய நன்மைகளையும், அவர் நமக்கு எவ்வாறு முக்கியத்துவம் உள்ளவராயிருக்கிறார் என்பதையும் சிந்தித்துப் பார்த்து, ஆவியில் தொழுது கொண்டு, ஆவிக்குரிய பாடல்களைப் பாடி, நம்முடைய இருதயத்தில் மெல்லிசையை இசைத்துக் கொண்டிருப்போம். வேதாகமம் கூட, "யாராவது துன்பப் பட்டால், அவர்கள் பாடல்களைப் பாடட்டும்" என்று கூறு கிறது. சந்தோஷமாயிருங்கள்; தியானம் பண்ணிக் கொண்டு,

நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்: எனக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமானேன்" என்ற இதை உங்கள் மனதில் கொண்டு வாருங்கள். உங்கள் மனதை அதைப் போன்று மையப்படுத்திக் கொள்ளுங்கள்; அப்போது ஏதோவொன்று உங்களுக்குச் சம்பவிக்கும். அப்போது திடீரென்று, அங்கே எதோவொன்று உங்கள் அருகில் வரும், ஒரு அபிஷேகம் உங்கள் மேல் வந்து, நீங்கள் அந்த நாற்காலியை விட்டு வெளியே வருவீர்கள். "கர்த்தரிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்."

***செய்தி:*** **அற்புதங்களின் யேகோவா, நவம்பர் 26, 1959, பத்தி எண் 25**

★★★★★

நாம் எப்பொழுதாவது ஒருவருக்கொருவர் தேவைப் படுகிறவர்களாக இருந்ததைக் காட்டிலும், நாம் amother - ஒருவருக்கொருவர் அதிகமாகத் தேவைப்படுகிறவர்களாக இருப்பது இப்பொழுது தான். நீங்கள் உங்களைத்தானே மற்றவரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டிக்கொண்டு, உங்களைத்தானே சற்று வித்தியாசமாக ஆக்கி, அவர்கள் இதை விசுவாசிக்கிற காரணத்தினால், அவர்களோடு கலந்து கொள்ள உங்களுக்கு விருப்பமில்லை என்றால், நீங்கள் அதனோடு சேர்ந்து கொள்ள விரும்பாமல் இருந்தால், நீங்கள் சரியாக அப்பொழுதே, சபையை விட்டுத் தூரமாக விலகி இருந்து, அபாயகரமான நிலத்தில் போய்க் கொண்டிருக் கிறீர்கள். உங்கள் தெரிந்தெடுப்புகளில் ஒன்றைக் கண்டு பிடித்து, அங்கேயே இருந்து, அவர்கள் யாவருக்கும் ஒரு கிறிஸ்தவ சகோதரனாக இருங்கள். ஒரு உண்மையான கிறிஸ்தவனாக இருப்பது அவ்விதமாகத் தான். அப்போது நாம் ஐக்கியத்தையும், பாதுகாப்பையும் பெற்றிருக்கிறோம்;



***செய்தி:*** **மோசேயைக் குறித்த போதனை, மே 13, 1956, பத்தி எண் 128**

★★★★★

8. நீங்கள் ஏற்கனவே அறிந்துள்ளபடி, நான்-நான் ஒருவிதத்தில் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு நபராயி ருக்கிறேன். நான் ஒரு சிறு அறைக்குள் சென்றேன், ஏனென்றால், நல்லது, தேவன் எல்லாவிடங்களிலும் உங்கள் ஜெபத்தைக் கேட்பார், ஆனால் அவரும் கூட, "இரகசிய தனி அறைக்குள் பிரவேசியுங்கள்" என்று கூறியிருக்கிறார். மேலும் ஓ, நான் இந்த எல்லா 47 வருடங்களிலும் இன்னுமாக நன்கு முழு வளர்ச்சியடைந்தவனாக இருக்கவில்லை என்றே என்னைக் குறித்து போதுமானது அங்கேயுள்ளதாக நினைக்கிறேன், எனவே நான் அப்படியே அந்தச் சிறு தனியறைக்குள் சென்று, கதவை இழுத்து சாத்திக் கொண்டு, அப்படியே ஆனந்த கண்ணீர் வடித்தேன்.

***செய்தி:*** **கிறிஸ்தவத்தைப் பாவனை செய்தல், ஜனவரி 27, 1957 பிற்பகல், பத்தி எண் 8**

★★★★★

9. உங்களை நீங்களே தனிமைப்படுத்திக் கொள்வதைக் குறித்து எதோவொன்றுள்ளது என்று உங்களுக்குத் தெரியும். அநேக ஜனங்கள் தாங்கள் சபைக்கு வருவது மட்டும் ஒருக்காலும் ஜெபிப்பதில்லை. ஜெபம் பண்ணுவதற்கான ஒரே இடம் சபை மட்டும் தான் என்று அநேக ஜனங்கள் நினைக்கின்றனர், ஆனால் புருஷர்கள் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ண வேண்டு மென்று வேதாகமம் கூறுகிறது. நாம் நம்மையே தனிமைப் படுத்திக்கொள்ளும் போது, நாம் சபையில் ஜெபித்திருந்தால், நாம் எப்படி ஜெபித்திருப்போமோ அதைக் காட்டிலும்,

வழக்கமாக வித்தியாசமாக ஜெபிப்போம். இயேசு அதைக் குறித்து கூறியிருக்கிறாரே, அந்த அந்தரங்க ஜெபமாக அது இருக்கிறது, "நீ ஒரு இரகசிய அறைவீட்டுக்குள் பிரவேசித்து, கதவைப் பூட்டி விடு, நீ அவ்வாறு செய்து, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற அவர் உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்" என்று அவர் கூறுகிறார்.

அவ்விதமாக நாம் ஜெபித்துக் கொண்டிருக்கும் போது, எல்லா மாய்மாலத்தையும் அதிலிருந்து எடுத்துப் போடுகிற அந்த ஜெபத்தில் ஏதோவொன்று இருப்பதாகத் தோன்றுகிறது. அப்போது நாம் தனித்திருக்கும்படியாக, தேவனோடுள்ள ஒரு மேலான தொடர்பில் வந்துவிடுவது போன்று தோன்றுகிறது. எப்போதாவது இயேசுவோடு தனித்திருக்க வேண்டிய அநேக நேரங்கள் என்னுடைய ஜீவியத்தில் இருந்திருக்கின்றன, அநேகமாக உங்கள் ஜீவியத்திலும் அவ்வாறு இருந்திருக் கலாம். அப்போது நான் என்னுடைய காரை எடுத்து, சாலையில் ஓட்டிக்கொண்டு, அப்படியே கவனமாக பார்த்துக் கொண்டே வருவேன். நெடுஞ்சாலையில், பரபரப்பு நிறைந் ததாக இல்லாத இடத்திற்கு நான் வந்தபிறகு, அல்லது ஏதோவொரு நாட்டுப்புற சாலையை விட்டு வெளியில் வந்தடைந்த பிறகு, அவருடைய இரக்கங்களாலும் நன்மை களாலும் மிகவுமாய் நிறையப்படும் அளவுக்கு, நான் அப்படியே காரை நிறுத்தி, கார் சக்கரத்தை கட்டுப்பாட்டில் வைத்திருந்து (held), ஒரு குழந்தையைப் போல அழுவேன் till.

10. அதுதான் தனிமையாக இருப்பது... அநேக நேரங்களில் நான் மலைகளின் மேலே ஏறிச் செல்கிறேன். அங்கே (என்னோடு கூட) இருக்கும் ஒவ்வொரு மனிதனும், நான் வேட்டைக்குப் போய் கொண்டிருக்கிறேன் என்று



சபையில் ஜெபித்திருந்தால், நாம் எப்படி ஜெபித்திருப் போமோ அதைக் காட்டிலும், வழக்கமாக வித்தியாசமாக ஜெபிப்போம்.

***செய்தி:*** **குருடனாகிய பர்த்திமேயு, மார்ச் 1, 1957, பத்தி எண் 9**

★★★★★

எனவே பிள்ளைகளே, துரிதமாக உங்கள் தேவனிடம் திரும்பி வாருங்கள். எதற்காகவும் உலகத்தோடு கூட சிக்கிக் கொள்ளாதீர்கள். இந்த நவீன உலகத்திற்கு வெளியே தரித்திருங்கள்; இந்த நவீன வேதசாஸ்திரங்களுக்கு வெளியே தரித்திருங்கள். அப்படியே தேவனுடைய ஆட்டுக்குட்டி யானவரையே நோக்கிப் பார்த்து, உங்கள் வேதாகமத்தை வாசித்து, எல்லா நேரமும் ஜெபம் பண்ணுங்கள். சோர்ந்து போகாதீர்கள். களிகூர்ந்து கொண்டே, சந்தோஷமாயிருங்கள், சபையின் மீட்பு சமீபமாயுள்ளது, நமக்காக மரித்த அவரை நாம் காணும்போது.

***செய்தி:*** **தேவன் தம்முடைய வார்த்தையைக் காத்துக்கொள்கிறார், ஏப்ரல் 7, 1957 காலை, பத்தி எண் 58**

★★★★★

மேலும் பரிசுத்த ஆவியானவர், தேவனுடைய தூதனா னவர் ஒவ்வொரு விசுவாசிக்காகவும் ஒரு செய்தியோடு கூட இன்றிரவு இங்கேயிருக்கிறார். அப்படியே அவரை உங்கள் மனதில் பதித்துக்கொள்ளுங்கள். அவரைக் குறித்தே சிந்தித் துக் கொண்டிருங்கள், அவர் எவ்வளவு அருமையானவர் என்றும், எவ்வளவு இனிமையானவர் என்றும், அவருடைய வாக்குத்தத்தங்களைக் குறித்தும் சிந்தித்துக் கொண்டிருங்கள். நீங்கள் வியாதிப்பட்டிருந்தால், "என்னுடைய மீறுதல்களினி மித்தம் அவர் காயப்பட்டு, என்னுடைய அக்கிரமத்தின்

நான் இன்றிரவு பிரசங்கிக்கக் கூடாது, ஏனென்றால் தாமதமாகிக் கொண்டிருக்கிறது, ஆனால் நீங்களோ அவ்வளவு ஒரு அற்புதமான கூட்டத்தினராக இருக்கிறீர்கள், எந்த ஊழியக்காரனும்... அது ஒரு பிரசங்கி என்பதை அதிகமாக எடுத்துக்கொண்டிருக்காது, அல்லது என்னால் பிரசங்கம் செய்ய முடிந்திருக்காது, ஆனால் ஜெபித்து, உங்களுடைய ஜெபங்களைக் கொண்டு, வார்த்தையைத் தாங்குகிற உங்களைப் போன்ற ஒரு கூட்டத்தினரைக் குறித்து, இதைப்போன்ற ஒரு இடத்தில் பிரசங்கம் பண்ணுவது யாருக்கும் எளிதுதான். பில்லிபாலும் சரியாக இங்கே பிரசங்கம் பண்ண முடியும் என்று நான் உண்மையாகவே விசுவாசிக்கிறேன். ஹா. மகனே, நீ எங்கேயிருக்கிறாய்? ஹா-ஹா-ஹா. அவன் மிகவும் கூச்ச சுபாவம் உள்ளவன், அவன் பெரும்பாலும் என்னிடம் பேசிக் கொண்டிருக்கும்போது, அவன் தன்னுடைய தலையைத் தாழ்த்தியே வைத்திருப்பான். ஆனால் அது ஒரு... அவனாலும் இதைச் செய்ய முடியும் என்று நம்புகிறேன். இது மிக எளிதாக இருக்கிறது, ஏனென்றால் இது பரிசுத்த ஆவியாக இருக்கிறது.

***செய்தி:*** **யேகோவா-யீரே, ஜனவரி 6, 1957, பத்தி எண் 6**

★★★★★

உங்களை நீங்களே தனிமைக்குட்படுத்துவதைக் குறித்து ஏதோவொன்றுண்டு என்று உங்களுக்குத் தெரியும். அநேக ஜனங்கள் தாங்கள் சபைக்கு வருவது மட்டும் ஒருக்காலும் ஜெபிப்பதில்லை. ஜெபம் பண்ணுவதற்கான ஒரே இடம் சபை மட்டும் தான் என்று அநேக ஜனங்கள் நினைக்கின்றனர், ஆனால் புருஷர்கள் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ண வேண்டுமென்று வேதாகமம் கூறுகிறது. அப்படியானால், நாம் நம்மையே தனிமைப்படுத்திக்கொள்ளும் போது, நாம்



நினைத்துக் கொள்கிறான். நானோ அங்கே மேலே சென்று, ஒரு பாறையின் மேல் அமர்ந்து, என்னுடைய முழு உள்ளார்ந்த ஜீவனும், உங்களால் உணர்ந்து கொள்ளக் கூடிய, ஏதோவொன்றினால் நிறையப்படுவது போல தோன்றும் மட்டுமாக, நான் மேலே ஆகாயத்தையே பார்த்துக் கொண்டிருப்பேன்... ஓ, அப்போது, உலகத்திலுள்ள எல்லாமே ஒரு முடிவுக்கு வந்து விட்டதாக தோன்றும். ஓ, தேவனோடு தனித்திருக்கும் அந்த விலையேறப்பெற்ற மணிநேரங்கள்.

மிகவும் மகத்தான வெளிப்பாடும், உள்ளுக்கமும் வரும் நேரம், அங்கே இருக்கும் போதுதான், அது நாம் தேவனோடு தனிமையாக இருக்கும் போதுதான். நாம் அதன்பேரில் இன்னும் அதிக நேரம் எடுத்துக்கொண்டிருக்கலாம், அப்போது நாம் கிறிஸ்துவுக்குள் சிறந்த ஒரு ஜீவியத்தையும், இன்னும் அதிக வெற்றிசிறந்த ஜீவியத்தையும் ஜீவித்திருப்போம் என்பதில் நான் நிச்சயமுடையவனாயிருக்கிறேன்.

***செய்தி:*** குருடனாகிய பார்த்திமேயு, மார்ச் 1, 1957, **பத்தி எண் 9-10**

★★★★★

80. ஆனால் அவருடைய அமர்ந்த மெல்லிய சத்தத்திற்குச் செவிகொடுங்கள். கிறிஸ்தவர்களாயிருக்க வேண்டும் என்று உரிமைக்கோரும் ஜனங்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் அவருக்கு முன்பாக உங்களை அமைதியாக்கிக் கொள்ளுங்கள். துவைத்தல் அதற்கு இடையூறாக இருக்க அனுமதிக்க வேண்டாம். வேலை அதற்கு இடையூறாக இருக்க அனுமதிக்க வேண்டாம். எதுவுமே அதற்கு இடையூறாக இருக்க அனுமதிக்க வேண்டாம். நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்ளும்படி எவரையும் அனுமதிக்க வேண்டாம். அப்படியே அவருக்கு முன் செல்லுங்கள். எங்காவது காடுகளுக்குள்

ஏறிச் செல்லுங்கள். சாலையின் பக்கவாட்டில் செல்லுங்கள். அந்தரங்க அறைக்குள்ளாகச் சென்று கதவைத் தாழிட்டுக் கொள்ளுங்கள். பிள்ளைகள் பள்ளிக்குச் செல்லும்போது, அங்கே உங்களுடைய முழங்கால்களை முடக்குங்கள் (get down). நீங்கள் எல்லாவிதமான சத்தங்களையும் எங்கும் கேட்டிருக்கிறீர்கள். ஆனால் அப்படியே கீழே முழங்கால் படியிட்டு, அந்தச் சத்தங்கள் அமைதியாக்கப்படுகின்ற வரையிலும் அங்கேயே தரித்திருங்கள், அப்பொழுது நீங்கள் உயரத்துவங்குவீர்கள். அது உங்களை மாற்றும். அது இந்தக் குட்டி சாமுவேலை வித்தியாசமுள்ளவனாக மாற்றினது போல, உங்களையும் வித்தியாசமுள்ளவர்களாக்கும். நீங்கள் இதைச் செய்வீர்களேயானால் அது உங்களுக்கு ஏதோ ஒரு காரியத்தைச் செய்யும். இப்பொழுது, அது நீங்கள் என்னவாயிருக்க வேண்டுமோ, அந்நிலைக்கு உங்களையே உருவாக்கும். அது நீங்கள் எந்தவிதமான கிறிஸ்தவனாயிருக்க வேண்டுமோ, அந்தவிதமாக உங்களை உருவாக்கும்.

***செய்தி:*** **அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுங்கள், அக்டோபர் 5, 1958, காலை, பத்தி எண் 80**

★★★★★

நீங்கள் தேவனோடு தனித்திருக்கும் போதுதான், அங்கேதான், மிக அதிக வெற்றிகரமான நேரங்கள் உள்ளன. புரிகிறதா? தேவனோடு தனித்திருங்கள்.

இயேசு, "அறைவீட்டிற்குள் பிரவேசித்து, கதவை மூடி, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு. அப்பொழுது அவர்... திறப்பார். அப்பொழுது அவர் அதை உங்களுக்கு வெளியரங்கமாக வெளிப்படுத்துவார்" என்று சொல்லியிருக்கிறார்.



பரவாயில்லை, அப்படியே தொடர்ந்து ஜெபித்துக்கொண்டேயிருங்கள். தொடர்ந்து ஜெபம் பண்ணுங்கள்!

***செய்தி:*** **மோசேயைக் குறித்தப் போதனை, மே 13, 1956, பத்தி எண் 115**

★★★★★

ஜெபமானது அதைத் தான் விசுவாசிகளுக்குச் செய்கிறது. நீங்கள் உங்கள் முழங்காலை முடக்கி (pitch), "கர்த்தராகிய இயேசுவே!" என்று கூறும்போது, அதுதான் உலகத்தை உங்களை விட்டு அனுதினமும் வெளியே வைக்கிறது. அப்போது அந்த இரத்தமானது இறங்கி வந்து, அது உங்களை முழுவதும் மூடி முத்திரையிட்டு விடுகிறது, எனவே பிசாசினால் உங்களிடம் வர முடியாது.

***செய்தி:*** **மோசேயைக் குறித்த போதனை, மே 13, 1956, பத்தி எண் 197**

★★★★★

அப்படியானால், நாம் ஒரு கிறிஸ்தவனாக இருப்போமானால், எம்மாதிரியான ஜனங்களாக இருக்க வேண்டும்? நாம் எம்மாதிரியான ஒரு சூழலில் ஜீவிக்க வேண்டும்? நாம் தொடர்பு கொள்ளும் ஒவ்வொரு நபருக்காவும் ஒரு ஆழமான அன்போடு கூட நம்முடைய இருதயங்கள் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருக்க, துக்கத்தோடு அல்லது ஏமாற்றத்தோடு இருக்கும் யாரோ ஒருவருக்கு ஆறுதலாகவும் (consoling), இனிமையானதும், சுகமளிக்கிறதுமான சூழலில் நாம் ஜீவிக்க வேண்டும்...

***செய்தி:*** **தெய்வீக அன்பு, ஆகஸ்டு 26, 1956, பத்தி எண் 53**

★★★★★

மாற்றி விடுகிறது, அது பாவிகளை பரிசுத்தவான்களாக மாற்றி விடுகிறது. அது ஜெபமே. நீங்கள் அதிகமாக சிரிக்கலாம். நீங்கள் அதிகமாக சத்தமிடலாம். நீங்கள் அதிகம் சாப்பிட லாம், ஆனால் நீங்கள் ஒருபோதும் அதிகமாக ஜெபிக்க மாட்டீர்கள். "மனிதன் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லாவிடங்களிலேயும் ஜெபம் பண்ண வேண்டும் என்று விரும்புகிறேன்" என்று வேதாகமம் கூறுகிறது. எனவே நீங்கள் ஒருபோதும் அதிகமாக ஜெபிக்க முடியாது.

***செய்தி:* விசுவாசம், ஏப்ரல் 27, 1956, பத்தி எண் 5**

★★★★★

தேவன் ஜெபத்திற்கு பதிலளிக்கிறாரா? ["ஆம்."] ஆமாம். அவர் மிகச் சீக்கிரத்தில் பதிலளிக்கிறாரா? எல்லா நேரமும் அவ்வாறு இல்லை. அப்படித்தானே, இல்லை. சிலநேரங்களில், அவர் நம்மைக் காத்திருக்கச் செய்கிறார். அது சரிதானா? ["ஆம்."] ஆனால், தேவன் ஜெபத்திற்குப் பதிலளிக்கிறார். அவர் அவ்வாறு பதிலளிப்பதில்லையா? எல்லாமே தவறாகப் போய்க் கொண்டிருப்பதின் நிமித்தமாக, அது நாம் ஜெபத்தை நிறுத்த வேண்டும் என்பதற்கு அடையாளமல்ல. எப்படியும் நாம் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டேயிருப்போம். நாம் அவ்வாறு ஜெபிக்க மாட்டோமா?

***செய்தி:* மோசேயைக் குறித்த போதனை, மே 13, 1956, பத்தி எண் 84**

★★★★★

115. நாம் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறதா? ஓ, தொடர்ந்து ஜெபித்துக் கொண்டே யிருங்கள்! அது சரிதானா? என்ன நடந்து கொண்டிருந்தாலும்



***செய்தி:* குருடனாகிய பர்த்திமேயு, ஜனவரி 24, 1961, பத்தி எண் 37**

★★★★★

மேலும், ஜெபம் பண்ணுங்கள். நீங்கள் தனித்திருந்து ஜெபிக்கும் கூட்டத்துக்கு வராமல், இங்கு ஒன்றுகூட வராதிருங்கள் - அவ்வாறு வர வேண்டாம். உங்கள் ஜெபத்தை அந்தரங்கத்தில் பண்ணுங்கள். அந்த இடங்களைத் தவிர்த்து விட்டு (Stay out), உங்கள் அறைகளுக்குள் செல்லுங்கள். ஏதோவொரு இடத்தில், யாரும் கண்டுபிடிக்காத வண்ணம் மறைத்துக்கொள்ளுங்கள். அப்படியே முழங்கால் படியிட்டு, தேவனுக்கு முன்பாக, அங்கேயே தரித்திருங்கள்.

***செய்தி:* இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல், ஜூன் 1, 1962, பத்தி எண் 110**

★★★★★

165. பாருங்கள், இப்பொழுது பிரதான காரியம் என்னவென்றால், உங்கள் ஜெபம் அந்தரங்கத்தில் இருக்க வேண்டும், உங்கள் பிரதான, நீண்ட ஜெபம் அவ்வாறு தான் இருக்க வேண்டும். முழு... ஜெபம் பண்ணுங்கள். ஒரு அந்தரங்கமான அறைவீட்டிற்குள் பிரவேசித்து, கதவை அடைத்துக்கொள்ளுங்கள். அங்கே தான் நீங்கள் பகல் முழுவதும், இரவு முழுவதும், அல்லது இரண்டு மணி நேரங்கள் ஜெபிக்க விரும்புகிறீர்கள், அங்கே ஜெபம் பண்ணுங்கள்.

***செய்தி:* சபை ஒழுங்கு, டிசம்பர் 26, 1963**

★★★★★

181. அது உங்கள், பாருங்கள், உங்கள் ஜெபமானது வீட்டில் இருக்கிறது. இயேசு, "நீங்கள் ஜெபம் பண்ணும்போது,

மாயக்காரர்கள் செய்வது போன்று, நின்று, நீண்ட நேரம்... ஒரு நீண்ட ஜெபத்தைச் செய்வது, *இதை, அதை,* அல்லது *மற்றதைக்* கூறாதீர்கள், காண்பிக்கும்படியாக அதைப் போன்ற எல்லாவற்றையும் செய்யாதீர்கள்" என்று கூறியிருக்கிறார். புரிகிறதா? அவர், "நீங்கள் ஜெபம்... ஜெபம் பண்ணும்போது, அறைவீட்டிற்குள் பிரவேசித்து, இரகசிய அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உங்களுக்குப் பின்னால் கதவை மூடி, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு, அப்பொழுது அவர் உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்" என்றார். இப்பொழுது, இரகசியமாக ஜெபம் பண்ணுவதற்கு அதுதான் வழியாகும், அதைத்தான் செய்யும் படி அவர் சொல்லியிருக்கிறார்.

***செய்தி:* சபை ஒழுங்கு, டிசம்பர் 26, 1963**

★★★★★

52. பிறகு எலியா, அவன் உள்ளே பிரவேசித்த போது, அவன் தரையில் மேலும் கீழும் நடந்தான், அவர்களில் யாரையும் அவனோடு அழைத்துச் செல்லவேயில்லை. அவன் தனியாகச் சென்றான். அவன் ஜெபித்து, ஜெபித்துக் கொண்டேயிருந்தான், பிறகு சென்று, தன்னுடைய முகத்தை பிள்ளையின் முகத்திற்கு மேலாக வைத்தான், அப்போது பிள்ளை ஏழு தரம் தும்மி, உயிரடைந்தான். அது சரிதானா? நிச்சயமாக.

மனோசாஸ்திரம் அல்ல, நண்பர்களே, ஆனால் தேவனுடைய வல்லமை மட்டுமே. இயேசு, "நீங்கள் ஜெபம் பண்ணும்போது, மாயக்காரர்களைப் போல, நின்று, கற்பிக்கப் பட்டிருக்கிற மிகவும் பெரிய அழகான ஜெபங்களைச் செய்யாதீர்கள். நீங்களோ அறைவீட்டிற்குள் பிரவேசித்து, கதவை அடைத்து, அந்தரங்கத்தில் பார்க்கிற உங்கள்



யல்ல; இந்தக் கூட்டத்திற்கு நீங்கள் உதவியாக இருக்க முடிந்த மிகப்பெரிய உதவி இதோ இருக்கிறது: அது என்னவென்றால் நீங்கள் ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணிநேரம் ஒதுக்கி, இந்தக் கூட்டத் திற்காக ஜெபம் பண்ணுங்கள் என்பது தான்.

கர்த்தர் யாரோ ஒருவரை உங்கள் இருதயத்தில் வைத்திருப்பாரானால், நீங்கள் வெளியே போய், அவரைப் போய் பார்த்து, கூட்டத்திற்குள் அவர்களை அழைத்துக் கொண்டு வாருங்கள். அதன்பிறகு அவர்கள் இரட்சிக்கப் படாமல் அங்கே உள்ளே இருப்பார்களானால், தேவன் அவர் களை இரட்சிக்க வேண்டுமென்றும், அவர்கள் வியாதிப்பட்ட வர்களாகவும், சுகம் தேவைப்படுகிறவர்களாகவும் இருந்து, அவர்கள் சுகம் பெறாதவர்களாக இருப்பார்களானால், தேவன் அவர்களைச் சுகப்படுத்த வேண்டுமென்றும் ஜெபம் பண்ணுங் கள். எந்தக் கூட்டத்திற்கும் உங்களால் கொடுக்க முடிந்த மிகப்பெரிய பங்களிப்பு அதுதான், இந்தத் தொல்லையின் நேரத்தில், தேவன் உதவி செய்யும்படி அவரிடம் ஜெபிப் பதும், தேவனைத் தேடுவதும் தான் மிகப்பெரிய பங்களிப் பாகும்.

***செய்தி:* ஒரு இரகசிய விசுவாசியாகிய யவீரு, ஜூன் 4, 1955, பத்தி எண் 6**

★★★★★

5. நாம் கர்த்தருக்குள் ஒரு மகத்தான நேரத்திற்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம், உங்களுடைய ஜெபங் களைக் கொண்டு, தேவனுடைய மகிமைக்காக நம்மால் முடிந்த மிகச் சிறந்ததைச் செய்வோம் என்பதில் நான் நிச்சயமுடையவனாயிருக்கிறேன். ஜெபமானது காரியங்களை மாற்றி விடுகிறது. ஜெபமானது மரணத்தை ஜீவனுக்கு மாற்றி விடுகிறது. ஜெபமானது வியாதியை ஆரோக்கியத்திற்கு

ஏறக்குறைய அதே அளவு தாக்கத்தை உடையதாக இல்லை, ஓ, ஒருக்கால் வரலாம், உங்களுக்குத் தெரியும், உதாரணமாக, நல்லது, நீங்கள் வெளியே சபையிலோ, அல்லது பீடத்தைச் சுற்றிலும் இருப்பது போன்று பகிரங்கமாக ஜெபிக்கும்போது, அது (தனியாக இருந்து ஜெபிப்பது போன்று) அதே அளவு தாக்கத்தை உடையதாக இல்லை. தனியாக வாருங்கள். அப்போது நீங்கள் பொது ஜனங்களிடத்தில் இருக்கும்போது, நீங்கள் ஜெபிக்கிறதைக் காட்டிலும், நீங்கள் தனித்திருக் கும்போது, ஒரு வித்தியாசமான ஜெபத்தை ஏறெடுப்பீர்கள். நீங்கள் எல்லாரும் நழுவி தனிமையாக வந்து விடுங்கள்; வெளியே போய், மிக இரகசியமாக சந்திக்கும் ஒரு ஸ்லத்தைக் கொண்டிருங்கள், அங்கே நீங்களும் கர்த்தரும் ஒரு நாளில் அநேக தடவைகள் சந்தித்து ஜெபியுங்கள்.

***செய்தி:* பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசம், மே 1, 1955 மாலை, பத்தி எண் 8**

★★★★★

ஜெபமானது மரணத்திலிருந்து ஜீவனுக்கு மாற்றி விடுகிறது. இன்றிரவு இங்கேயிருக்கும் ஒவ்வொரு பாவியை யும் மரணத்திலிருந்து ஜீவனுக்குட்படும்படியாக அது செய்யும். இன்றிரவு ஒவ்வொரு வியாதிப்பட்ட நபரும் வியாதியிலிருந்து ஆரோக்கியத்திற்கு (வரும்படி) அது செய்யும். ஜெபமானது காரியங்களை மாற்றிவிடுகிறது. எனவே எப்போதுமே அதை மனதில் வைத்திருங்கள். இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்.

இந்தக் கூட்டத்திற்கு நீங்கள் பணம் கொடுக்க கடமைப் பட்ட (indebtment) ஒருவராக இருக்க நீங்கள் விரும்பினால், நீங்கள் ஜெபிக்க வேண்டாம். இந்தக் கூட்டத்திற்கு நீங்கள் கொண்டிருக்க கூடிய மிகப் பெரிய உதவியாக நீங்கள் இருக்க விரும்புவீர்களானால், அது நிதி செலுத்தும்படியான உதவி



பிதாவை நோக்கி ஜெபம் பண்ணுங்கள்" என்றார். அது எப்போதுமே அந்த விதமாகத்தான் இருக்கிறது. தேவனிடத் தில் விசுவாசமாயிருங்கள்.

***செய்தி:* சுகமளித்தல் (புற்று நோய் என்பது என்ன), செப்டம்பர் 4, 1953, பத்தி எண் 52**

★★★★★

24. மேலும் கவனியுங்கள், அவர் எப்போதுமே வேதப் பிரகாரமாக இருக்கிறார். அவர், "'நீ ஜெபம் பண்ணும்போது, காண்பிக்கும்படியாக மாயக்காரர்கள் செய்வது போன்று ஜெபிக்க வேண்டாம். நீ இரகசிய அறைவீட்டிற்குள் பிரவேசித்து, நீ அவ்வாறு செய்யும் போது, கதவை அடைத்து, பிறகு அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு, அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற அவர் உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்' என்று நம்முடைய ஆண்டவர் சொல்லவில்லையா" என்றார்.

மேலும் அவர், "நீ சொப்பனம் கண்ட அந்த நேரத்தைக் குறித்துத் தேடிக் கொண்டிருந்தாயே, அந்தப் பெயர் ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்டார்.

அதற்கு நான், "ஆம்" என்றேன்.

அவர், "நான் உன்னை அங்கே உள்ளே சந்திப்பேன், இந்த முறை அது ஒரு வெளிப்படையான பொது காட்சியாக இருக்காது" என்றார். அப்போது தரிசனம் என்னை விட்டகன்றது.

***செய்தி:* பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படுதல், பிப்ரவரி 19, 1956**

★★★★★

107. இப்பொழுது, இங்கே ஏதோவொரு காரியம் இருக்கிறது. கூர்ந்து கவனியுங்கள். கர்த்தருடைய தூதனான வருக்கும் அந்த ஒளிக்கும் இடையே வித்தியாசம் உண்டு. ஏனென்றால், இரவில், இங்கே மேடையில் அது வரும்போது, அது ஒருவிதத்தில், "வியூ! வியூ! வியூ!" என்பது போல, அது செய்வது போன்று, ஏதோவொன்று அசைந்து கொண்டிருப் பதை நான் கேட்டேன், மேலும் அக்கினி மிக வேகமாக சுழலுவது போன்று, வேகமாக வந்து தொடுகிற பற்றியெரியும் ஜுவாலையைப் (licking blaze) போன்று அது இருக்கிறது. அது என்னை விட்டு, அந்தக் கூட்டத்தினரின் (audience) மேலாக இறங்கி சென்று, அது போய், அந்தச் சிறிய கட்டிடத்தின் உச்சிக்கு மேலாக நின்று, பிறகு அதன்மேல் அமர்ந்தது. அப்போது, அது அவ்வாறு அமர்ந்த போது, எனக்கு அருகில், எனக்குப் பின்னால் நின்று கொண்டிந்த, இந்த ஒன்று, அந்த அதே தூதனானவரின் சத்தமானது, அவர், "நான் உன்னை அங்கே உள்ளே சந்திப்பேன். இதுதான் மூன்றாம் இழுப்பு, ஆனால் அதைக் குறித்து யாருமே எதையும் அறிய மாட்டார்கள்" என்றார்.

அதற்கு நான், "நல்லது, எனக்கு இது புரியவில்லையே. ஏன் அங்கே உள்ளே? ஏன் அங்கே?" என்று கேட்டேன்.

அவர், "இந்நேரத்தில், அது ஒரு பொது காட்சியாக இருக்காது" என்றார்.

மேலும் நான், "அதைப் போன்ற அந்தச் சிறு தனி யறைக்குள் போவது, எனக்குப் புரியவில்லையே" என்றேன்.

108. அதற்கு அவர், "'நீ ஜெபம் பண்ணும்போது, மனுஷருக்கு முன்பாக கேட்கப்பட வேண்டுமென்று விரும்பும் மாயக்காரர்களைப் போல இருக்க வேண்டாம். ஆனால் நீயோ இரகசிய அறைவீட்டிற்குள் பிரவேசித்து,



***செய்தி:*** **ஆண்டவரே, உம்முடைய வார்த்தையின் படியே வலையைப் போடுகிறேன், டிசம்பர் 7, 1954, பத்தி எண் 63 முதல் 66 வரை**

★★★★★

81. இந்நாட்களில், கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைத் தவிர எல்லாவற்றைக் குறித்தும் பேசுகிறார்கள். அவர்கள் வெளியே சென்று, எப்போதுமே நிறைய முட்டாள்தனமாக காரியங் களையோ, அவர்கள் பேச விரும்புகிற எல்லாவற்றையுமோ அல்லது ஏதோவொன்றையே அவர்கள் பெற்றிருக்கிறார்கள், ஆனால் அவர்கள் ஒருபோதும் கிறிஸ்துவைக் குறித்து பேசுவதே கிடையாது. அவரைக் குறித்துப் பேசுங்கள்; அவரைக் குறித்து பாட்டு பாடுங்கள். அவரை நேசியுங்கள்; அவரை உங்கள் இருதயத்தில் வைத்திருந்து, இரவும் பகலும் எல்லா நேரமும் அவரைக் குறித்தே கவனம் செலுத்துங்கள்.

***செய்தி:*** **உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசு, மார்ச் 2, 1955, பத்தி எண் 81**

★★★★★

கர்த்தரோடு தனிமையாக இருக்க உங்களுக்கு விருப்ப மில்லையா? என்னே, என்னே, அப்படியே தனித்திருங்கள். அங்கே சிலசமயங்களில்... நாங்கள், "என் ஆண்டவரே, சிலவேளைகளில், கிறிஸ்துவோடு முழுவதும் தனித்திருக்க விரும்புகிறேன்" என்ற ஒரு சிறு பாடலைப் பாடுவது வழக்கம். நீங்கள் எப்பொழுதாவது அதைக் கேட்டிருக் கிறீர்களா? முழுவதும் தனியாக இருந்தே, நான் என்னுடைய கஷ்டங்கள் எல்லாவற்றையும் அவரிடம் கூற முடியும். அந்தவிதமாகத்தான் அவர் உங்களிடம் வந்து, தம்மிடம் தனித்திருக்க விரும்புகிறார். உங்கள் ஜெபங்கள், நீங்கள் தனிமையாக இருக்கும் போது, உள்ளதைப் போன்று,

ஜெபித்துக் கொண்டிருந்தேன். அது மறுபடியும் வெட்டி இழுத்தது. உடனே நான், "நல்லது, இது வினோதமாக இருக்கிறதே" என்று நினைத்தேன். நான் கீழே நோக்கிப் பார்த்தபோது, அவர்களுடைய நெற்றியின் மேலுள்ள தோல் சுருங்கினதைக் கண்டேன். ஹா, பிசாசு அங்கே தவறாக இருந்தான். எனவே அவர்கள் என்னை உற்றுப் பார்த்தார்கள், பிறகு எழுந்து விட்டார்கள். நான் ஒரு வார்த்தையுமே சொல்லவில்லை, அப்படியே தொடர்ந்து - ஜெபிப்பதை நிறுத்தினேன். அவரோ அப்படியே அழுதுகொண்டும், தம்முடைய கரங்களையும் தமது தொப்பியையும் இவ்விதமாக முறுக்கிப்பிழிந்து கொண்டும், வானத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அவர்கள் எழுந்தார்கள்.

அவர்கள், "உம்முடைய பெயர் என்ன?" என்று கேட்டார்கள்.

"நான் சகோதரன் பிரன்ஹாம்" என்றேன்.

66. அவர்கள் பார்த்தபோது, அவர், "அம்மா" என்றார்... அந்த பரிதாபமான வயதான மனிதர் அவர்களை இவ்விதமாக தம்முடைய கரங்களில் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, கதறி அழத் தொடங்கினார். பிறகு அந்தப் பெண்மணி மாத மாதக்கணக்காக கூட்டங்களில் கலந்து கொண்டார்கள்; அதை அவர்கள் கூறுவதைக் கேட்டேன். நல்லது, அது எட்டு ஒன்பது வருடங்களுக்கு முன்பு சம்பவித்தது. ஏறக்குறைய இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு, நான் கடல் கடந்து வெளிநாடுகளுக்கு போவதற்கு சற்று முன்பு தான் இங்கே அவர்கள் கூறுவதைக் கேட்டேன், அவர்கள் அருமையாகவும் மிக நன்றாகவும் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த சுகவீனமும் இல்லவேயில்லை, அவர்களால் எவ்வளவு கூடுமோ அவ்வளவு பூரண சுகத்துடனும் நலத்துடனும் இருக்கிறார்கள்.



அந்தரங்கத்தில் பார்க்கிற பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற அவர் உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்' என்று நம்முடைய ஆண்டவரால் எழுதப்பட்டிருக்கவில்லையா?" என்று கூறினார். அது பரிபூரணமாக வேதவாக்கியத்தின் பேரிலேயே உள்ளது. ஒவ்வொரு முறையும், அது அவ்வாறு தான் உள்ளது.

அதற்கு நான், "எனக்குப் புரிகிறது" என்றேன்.

109. அதன்பிறகு அவர் என்னை இந்த இடத்திற்கு எடுத்துச் சென்று, நான் இருந்த இடத்திலிருந்த இந்த அறைக்குள்ளே என்னை உட்கார வைத்தார். அப்போது மூன்றாம் முறையாக என்ன செய்ய வேண்டுமென்று அவர் என்னிடம் கூறினார். இப்பொழுது, கிறிஸ்தவ நண்பர்களே, அது இருக்கும், நான் இந்த உலகத்தை விட்டுப் போகும் போதும், அது இன்னுமாக என்னுடைய நெஞ்சிலேயே இருக்கும். நான்... ஆனால், என்ன சம்பவிக்கப் போகிறது என்ற என்னுடைய வார்த்தைகளை நீங்கள் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.

***செய்தி:* ஒரு தரிசனம் என்பது என்ன?, ஏப்ரல் 8, 1956 பிற்பகல்**

★★★★★

184. நான் மதவெறிப்பிடித்தவனாக (fanatically) இல்லை என்று நம்புகிறேன். ஆனால் இப்பொழுது நான் என்னுடைய அறைக்குள் சென்று, கதவை ஒன்றாக இழுத்துப் பூட்டிவிடுவது போன்று எனக்குத் தோன்றுகிறது, ஒரு இரகசிய அறைவீட்டிற்குள் பிரவேசித்து, கதவுகளை அடைப்பது. அப்போது இப்பொழுது சுற்றிலும் இருக்கிற கூட்டத்தினர் எல்லாரை விட்டும் தனிமைப்படுத்திக் கொள்கிறேன், பாருங்கள். "பிறகு அந்தரங்கத்தில் பார்க்கிற

உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு, அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற அவர் வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். கேளுங்கள், அப்பொழுது கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது திறக்கப்படும்; தேடுகிற யாவரும், கண்டடைகிறார்கள்."

***செய்தி:*** விசுவாசமே நமது ஜெயம், அக்டோபர் 4, 1958, பத்தி எண் 184

★★★★★



பெண்மணி மரித்து விட்டார்கள் என்பதை நினைப்பதே எனக்குக் கடினமாக இருந்தது, ஏனென்றால்... இப்பொழுது, அவர்கள் மரித்திருக்கலாம். என்னால் கூற முடியாதிருந்தது. ஆனால் அவர்கள்... அவர்கள் அவளுடைய பொய்ப்பற்களை வெளியே எடுத்து விட்டிருந்தார்கள், அவர்களுடைய உதடுகளோ இவ்விதமாக பின்னிட்டு அமுங்கிப் போயிருந்தது. அவர்களுடைய கண்களிலிருந்து கூழை தண்ணீர் போன்றவை வெளியே இருந்தன, அவைகள் சரிந்துப் போயிருந்தன. அவர்களுடைய வியர்வையானது மிகவும் பிசுபிசுப்பாக இருந்தது. எந்தத் துடிப்புமேயில்லை. துடிப்பு எதுவுமேயில்லை. நான் அவர்களுடைய கையைப் பிடித்துப் பார்த்தேன்.

அப்போது நான் முழங்கால்படியிட்டு, அவர்களுடைய கரத்தைப் பிடித்துக் கொண்டு, ஜெபிக்கத் தொடங்கினோம். "ஓ தேவனே, என்னால் மாத்திரம் இவளைக் கண்டு, இன்னும் ஒருமுறை இவளிடம் பேச முடியுமானால்" என்று அவ்விதமாக, அவர் அப்படியே அழுது ஜெபித்துக் கொண்டிருந்தார்.

நானும் ஜெபித்துக் கொண்டிருந்தேன். நான், "பிதாவே, இந்த அன்பான சகோதரன் மேல் இரக்கமாயிருக்க வேண்டுமென்று நான் உம்மிடம் ஜெபிக்கிறேன். அவருக்கு உதவி செய்து, அவரை ஆசீர்வதிக்கும்படியாக ஜெபிக்கிறேன். இந்த வழியெல்லாம் வந்திருக்கிற இந்த அன்பான பெண்மணிக்காக ஜெபிக்கிறேன்" என்றேன். அப்போது அவர்கள் என்னுடைய கரத்தைத் தள்ளுவதை உணர்ந்தேன்.

65. பிசாசோ என்னிடம், "அது தசைகள் தான் என்று பார். அவள் மரித்து விட்டாள். அது வெறுமனே அவளுடைய தசை வெட்டி இழுப்பது தான்" என்றான். நானும் அவன் சொல்வதை ஒப்புக்கொண்டேன். எனவே, நான் அப்படியே தொடர்ந்து ஒரு சில நிமிடங்களாக

★★★★★

63. அவர், "ஓ, சகோதரன் பிரன்ஹாமே, பாவம் தாயார், அவள் மரிப்பதற்கு முன்பாக, மிக மோசமான நிலையிலும் உம்மைக் காண விரும்பினாள். அவள் அவ்வளவு ஒரு நல்ல பெண்மணி, சகோதரன் பிரன்ஹாமே. அவள் அங்கே மேலேயுள்ள உழுத நிலத்தில் அந்தப் பழைய மண்கட்டிகளை உடைத்து தான், நான் எப்படியிருக்கிறேனோ அப்படி என்னை ஆக்கினாள். இரண்டு வருடங்களுக்கு முன்பு, அவளுக்கு புற்றுநோய் ஏற்பட்டது. நாங்கள் அவளை செயின்ட் லூயிஸிற்கு அழைத்துச் சென்றோம். மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்தார்கள். அவர்கள் எல்லாவற்றையும் செய்தார்கள். அவளைச் சுகப்படுத்த முயற்சிக்கும்படி - அதைச் செய்ய முயற்சிக்கும்படி, நான் என்னுடைய கழுதை களையும் மற்றும் எல்லாவற்றையும் கூட விற்று விட்டேன். மருத்துவர்களோ அவளைக் கைவிட்டு விட்டனர். இந்த மனிதன் இக்காலையில் மேலே வந்து சாட்சி கூறிக் கொண் டிருந்ததை நாங்கள் கேட்டோம். அவளை அழைத்துவர ஆம்புலன்ஸை பெறும்படி, நாங்கள் சென்று, அவள் செய்து வைத்திருந்த கொஞ்சம் மெல்லிய மெத்தைகளையும், சென்ற வருடம் அவள் பதப்படுத்தி வைத்திருந்த சில பிளாக்பெர்ரி பழங்களையும் விற்று விட்டோம். இப்பொழுதோ, அவள் மரித்து விட்டாளே, சகோதரன் பிரன்ஹாமே. ஓ, அவள் இல்லாமல் நான் என்ன செய்யப் போகிறேன் என்று (தெரிய)வில்லை. வீட்டிற்குத் திரும்பிப்போகும் போது, அது மிகவும் தனிமையாக இருக்குமே" என்றார்.

64. அப்போது நான், "நல்லது, தகப்பனாரே, செய்யும்படி நான் அறிந்த ஒரே காரியம் என்னவென்றால், நீரும் நானும் ஒரு ஜெபத்தை ஏறெடுப்போம்" என்று கூறினேன். அவர்கள் மரித்திருந்ததை உணர்ந்தேன். அந்தப்

# இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்

## PRAY WITHOUT CEASING

~~~~~~~

***1 தெச. 5:17***

**இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்.**

***1 சாமு. 12:23***

**நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனாயிருப்பேன்; அது எனக்குத் தூரமாயிருப்பதாக; நன்மையும் செவ்வையுமான வழியை நான் உங்களுக்குப் போதிப்பேன்.**

***லூக்கா 18:1***

**சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ண வேண்டும் என்பதைக்குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்:**
~~~~~~~

***1 தீமோ. 2:8***

**அன்றியும், புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம்பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன்.**

★★★★★

**இதைக் குறித்து சகோ. பிரன்ஹாம் கூறுவதை இங்கு வாசிக்கலாம்:**

17. நான் அந்த இரவு ஓட்டலுக்கு சென்றேன், என் சகோதரர் டோனியும், என் சிறிய மகன் பில்லியும் ஓட்டலுக்குள் சென்றனர். அது ஏறக்குறைய காலை 2 மணியாக இருந்தது. நான் படுக்கையில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தேன், நான் அப்பொழுதுதான் உறங்கச் சென்றிருந்தேன், நான் இரவில் அதிகம் தூங்குவது கிடையாது, இரவில் எப்போதும் ஜெபித்துக்கொண்டிருப்பேன்.

இரவுநேரத்தில், காலை நேரத்துக்கு சற்று முன்பு எல்லா பிசாசுகளின் வல்லமைகளும் கிரியை செய்வதை நிறுத்திவிடும் போது (ஓய்ந்துவிடும்போது). அவைகள் சுற்றித் திரியாத (உலவாத) போது, அந்த நேரத்தில்தான் பரிசுத்த ஆவியானவர் என்னிடத்தில் உள்ளே கடந்து வந்து பேசுகிறார். நீங்கள் ஜெபிக்க விரும்பினால், அதிகாலையில் (ஜெபிக்கச்) செல்லுங்கள்; அதிகாலையில் எழுந்திருங்கள்.

***செய்தி:*** **தூதனும் கட்டளையும், ஆகஸ்டு 21, 1950**

★★★★★



169. “அவர்கள் இந்தப் பீடத்திலேயே தரித்திருந்து, ஜெபத்திற்காக தங்கள் இருதயத்தில் அவ்வளவு ஒரு பாரம் கொண்டவர்களாய், இங்கேயே இரவும் பகலும் இருந்து, மற்ற எல்லாவற்றையும் செய்பவர்களாகவும், தங்கள் வீட்டில் தொடர்ந்து எப்போதும் ஜெபித்துக் கொண்டேயிருப்பவர்களாகவும், தாழ்மையுள்ளவர்களாகவும் இருந்து, தேவனிடம் வருகிற ஜனங்களைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கிறவர்களாகவும், மருத்துவமனையில் அழைப்பு விடுத்து, வியாதியஸ்தர்களை பார்க்கச் செல்லுகிறவர்களாகவும், சபைக்கு வருகிற ஜனங்களைப் பெற்று, சரியானதையே செய்ய முயற்சிக்கிறவர்களாகவும் இருக்கிற ஒரு சபையே நான் கொண்டிருக்க அதிகம் விரும்புகிறேன். ஒன்றுகூடி வரும் மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் நான் அதைக் கொண்டிருக்கவே அதிகம் விரும்புகிறேன்; மற்றவை சரியாக இருந்த போதிலும், அது சபையில் பொருத்தமானதாகவே இருக்கிறது.”

170. ஆனால் நான் அதை உடையவனாய் இருந்திருக்க வேண்டியிருந்தால், நான் அதையே முதலாவது வைத்திருப்பேன். ஏனென்றால் நீங்கள் அதைப் பெற்றிருக்கிறீர்கள் என்றால், மற்றவையும் நடந்து விடும்.

***செய்தி:*** **கேள்விகளும் பதில்களும் #1, ஜனவரி 3, 1954 காலை, பத்தி எண் 167 - 170**

★★★★★

ஒரு கிறிஸ்தவனைப் போன்று ஜீவியுங்கள். ஒரு கிறிஸ்தவனைப் போல இருங்கள். எல்லா நேரமும் ஜெபம் பண்ணுங்கள். தேவன் உண்டு என்றும் அவர் உங்கள் ஜெபத்திற்குப் பதிலளிக்கப் போகிறார் என்றும் விசுவாசியுங்கள்.

***செய்தி:*** **தேவனை அணுகும்விதம், ஜனவரி 23, 1955, பிற்பகல், பத்தி எண் 34**

இன்றிரவு இங்கேயிருக்கும் பாப்டிஸ்டுகளே, மெதோடிஸ்டுகளே, நீங்கள் அப்படியே உங்கள் சபையில் துவங்கி, அப்படியே ஜெபித்து, உங்கள் சபையிலுள்ள எல்லாரையும் ஜெபிக்க செய்யுங்கள். ஊழியக்காரர்களாகிய நீங்களும் அதே காரியத்தையே செய்யுங்கள். அப்படியே ஜனங்களை மிகவும் நன்றாக ஜெபிக்கும்படி செய்யுங்கள், அப்பொழுது நீங்கள் - மீதியானது தானாகவே பார்த்துக்கொள்ளப்படும். தேவன் மீதியானதைப் பார்த்துக்கொள்வார்.

***செய்தி:*** ஒரு பெரிய சாட்சி, நவம்பர் 15, 1953 மாலை

★★★★★

தேவன், "இப்பொழுது, வில்லியம் பிரன்ஹாமே, கவனி, நீ அந்த கூட்ட ஜனங்களிடம் என்ன கூறுகிறாய் என்று, அவர்களுக்காக நீ பதில் கூறும்படி நான் செய்யப் போகிறேன். இப்பொழுது, அவர்கள் எல்லாரும் சத்தமிட விரும்புகிறாயா?" என்று கூறலாம்.

"நிச்சயமாக, அவர்கள் சத்தமிட விரும்புகிறேன்."

"அவர்கள் எல்லாரும் அந்நிய பாஷைகளில் பேச விரும்புகிறாயா?"

"அவர்கள் ஒவ்வொருவரும் அந்நிய பாஷைகளில் பேச விரும்புகிறேன்."

"அவர்கள் எல்லாரும் ஆவியில் நடனமாட விரும்புகிறாயா?"

"அவர்கள் ஒவ்வொருவரும் அதைச் செய்ய விரும்புகிறேன்."

168. "சரி, நல்லது, அது மிகவும் நல்லது, ஆனால் அவர்கள் எதைச் செய்ய அதிகம் விரும்புகிறாய்?" உ-ஊ.



எனவே, உங்களுக்கு விருப்பமானால், நாம் மறுபடியுமாக நம்முடைய தலைகளை வணங்குவோமாக. நண்பர்களே, நீங்கள் அதிகமாக சிரிக்கலாம்: நீங்கள் அதிகமாக பேசலாம்; நீங்கள் அதிகமாக நடக்கலாம்; ஆனால் நீங்கள் ஒருபோதும் அதிகமாக ஜெபிக்கவே மாட்டீர்கள். "புருஷர்கள்... இல்லாமல், பரிசுத்த கரங்களை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன்."

***செய்தி:*** கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?, ஆகஸ்டு 24, 1950, பத்தி எண் 25

★★★★★

15. நான் அங்கு சென்று, முழங்கால்படியிட்டேன். உங்களுக்குத் தெரியுமா, காட்டு பிரதேசத்தில், மிகவும் முட்கள் நிறைந்த படரும் கொடியானது (briers) உங்களைக் குத்துவதையும், தரையானது மிக கடினமாகவும் இருப்பது போன்று எப்பொழுதாவது உணர்ந்திருக்கிறீர்களா? அவ்வாறு உங்களுக்கு எப்பொழுதாவது இருந்ததுண்டா? பலவந்தம் பண்ணி (ஜெபிக்க) வேண்டிய நேரம் அதுவே. அது பிசாசு உங்களை அதிலிருந்து தடுத்து நிறுத்த முயற்சிப்பதாகும். தொடர்ந்து செல்லுங்கள். நீங்கள் சரியானதைச் செய்து கொண்டிருப்பது வரையில், உங்களால் தவறானதைச் செய்து கொண்டிருக்க முடியாது. புரிகிறதா? நீங்கள் இந்த வழியாகப் போய்க் கொண்டிருக்கும் போது, உங்களால் இந்த வழியாகவும் போக முடியாது. அது ஜெபிப்பதற்கு சரியான (நேரம்) என்பதை நான் அறிவேன். நான் அப்படியே தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தேன்; காற்று வீசியது, ஒரு முள்செடியானது என்னுடைய முகத்தில் தாக்கியது. நான் அப்படியே, "உமக்கு நன்றி, ஆண்டவரே" என்று கூறிவிட்டு, தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தேன்.

மேலும் சற்று நேரம் கழித்து, நான் ஆவியில் காணாமல் போனேன். நீங்கள் எப்போதாவது ஆவியில் தொலைந்துபோய் இருக்கிறீர்களா? முள்ளில் பற்றிய தீயை போல மிக வேகமாக பேசுவதற்காக என்னை மன்னிக்கவும், ஆனால் நான் வேகமாக கடந்து செல்ல முயற்சிக்கிறேன். ஆனால் நான் ஆவியில் தொலைந்து போனேன். அநேகமாக, நான் எங்கே இருந்தேன் என்றே தெரியவில்லை. அந்த மணியோசையை நான் கேட்டேன், ஆனால் சாப்பாட்டைக் குறித்து நினைப்பதைவிட மிக நல்ல நேரத்தை நான் தேவனிடம் கொண்டிருந்தேன். அந்த மணியோசை மீண்டும் மீண்டும் ஒலித்துக்கொண்டே இருந்தது. மேலும் இருட்டிக் கொண்டிருக்கிறது என்று நான் அறிந்துகொண்டேன். நானோ அப்படியே ஜெபித்துக்கொண்டிருந்தேன். "உம்முடைய நன்மைகளுக்காக, உமக்கு நன்றி கர்த்தாவே" என்று சொன்னேன்.

***செய்தி:*** **பிசாசுகளின் ஜீவனும், தரிசனங்களும், ஜூலை 21, 1951**

★★★★★

அந்த நாளில், அங்கே மில்டவுனில், இரவு உணவு அருந்த தூரமாக திரு. ரைட் அவர்களிடம் சென்றேன். இதோ, அவர் சரியாக இங்கேயே இருக்கிறார். மேலும் அவர்... நான், "சகோதரன் ரைட் அவர்களே, நான் ஜெபிக்கும்படியாக மேலே அந்த மலைக்குப் போயாக வேண்டும்" என்றேன். நான் மேலே சென்று - அங்கே மேலே போய், புதர்களுக்குள்ளே முழங்காற்படியிட்டு, ஜெபித்துக் கொண்டிருந்தேன், அப்போது முட்கள் என்மேல் குத்திக் கொண்டிருந்தன. நான் ஜெபத்தை நிறுத்த முடியாதிருப்பது போன்றே தோன்றினது. இரவு உணவுக்கான மணி அடிப்பதை நான் கேட்டேன், அப்பொழுது ரைட் தாயார் நாங்கள் வரும்படி விரும்புகி



றார்கள் என்பதை அறிந்து கொண்டேன். நானோ அப்படியே தொடர்ந்து ஜெபித்து, ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். நான், "கர்த்தாவே, நான் என்ன செய்ய வேண்டுமென்று நீர் விரும்புகிறீர்" என்று கேட்டேன். திடீரென்று, இதோ அந்த ஒளி வருகிறது, அது ஒருவகை புதரின் (dogwood bush) வழியாக இறங்கி வந்து, சரியாக என்மேல் பிரகாசித்தது; அப்பொழுது ஒரு சத்தம், "கார்ட்டர்ஸ் வழியாகப் போ" என்று கூறுவதைக் கேட்டேன். அது போதுமானதாக இருந்தது.

***செய்தி:*** **தெய்வீக சுகமளித்தலின் நியமங்கள், செப்டம்பர் 23, 1951, பத்தி எண் 65**

★★★★★

16. நல்லது, எழுப்புதல் நடந்து கொண்டிருக்கும் கொரியாவில், மெதோடிஸ்டுகளும், பாப்டிஸ்டுகளும், பிரஸ்பிடேரியன்களும் மகத்தான சுகமளிக்கிற ஆராதனைகளையும், அந்நிய பாஷைகளில் பேசுவதையும், மற்றும் எல்லாவற்றையும் கொண்டிருக்கிறார்கள். அவர்கள், "இவர்கள் எல்லாம் பெந்தெகோஸ்தேகாரர்களா?" என்று கேட்டார்கள். அவர்களில் யாருமே பெந்தெகோஸ்தேகாரர்கள் அல்ல. அவர்கள் எல்லாரும் மெதோடிஸ்டுகளும், பாப்டிஸ்டுகளும் மற்றும் காரியங்களுமாக இருக்கிறார்கள், ஆனால் அது அப்படியே அவ்வளவு ஒரு இழுப்பாகவும், அழுத்தமாகவும் இருக்கிறது... அவர்கள் வெறுமனே ஜெபிக்கத் தொடங்க வேண்டியிருந்தது. நீங்கள் ஆவிக்குள்ளாகும் போது, தேவன் மீதியானதைப் பார்த்துக்கொள்வார். புரிகிறதா? அதில் மீதமுள்ளது தானாகவே வந்து விடுகிறது. பாருங்கள்? பிரதான காரியம் என்னவென்றால், ஜெபிக்கத் துவங்குதல் தான். அப்போது மீதமுள்ளவை சரியாகவே இருக்கும்.